RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-342 | 08 டிசம்பர் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுக நடத்துவது மன்னராட்சி அல்ல
### ஆதவ் அர்ஜுனாவுக்கு அமைச்சர் ரகுபதி பதில்

புதுக்கோட்டை, டிச.8

"திமுக நடத்துவது மன்னராட்சி அல்ல, ஜனநாயக ஆட்சியைத் தான் நடத்துகிறது'' என மாநில சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். விசிக துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இவ்வாறு கூறினார்.



புதுக்கோட்டையில் செய்தி யாளர்களிடம் அவர் கூறும் போது, "வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 200 இடங்களில் வெல்வோம் என்று கூறி வரும் கட்சிக்கு (திமுக) 'மைனஸ்' தான் கிடைக்கும் என நடிகர் விஜய் கூறியுள்ளார். 'பிளஸ்'ஐ, 'மைனஸ்' ஆக ஆக்கிக் காட்டும் வல்லமை யாருக்கும் இருக்காது. வரும் தேர்தலில் 200 இடங்களில் திமுக கூட்டணி வெல்லும். தன்னோடு விசிக தலைவர் திருமாவளவன் வருவார் என்பது நடிகர் விஜய்யின் விருப்பமாக இருக்கலாம். ஆனால், திமுக கூட்டணியில்தான் இருக்கிறேன் என்று திருமாவளவன் தெளிவாக கூறிவிட்டார்.

திமுக மன்னராட்சியை நடத்த வில்லை. ஜனநாயக ஆட்சியைத்தான் நடத்துகிறது. வாரிசு அரசியல் இல்லை. உழைப்பினால்தான் வந்துள்ளோம். திமுகவின் ஒவ்வொரு தொண்டரும் ஏற்றுக்கொண்ட தலைவர்தான் ஸ்டாலின். அதேபோலதான், உதயநிதி ஸ்டாலினின் உழைப்பை ஏற்றுக்கொண்டு தொண்டர்களின் வலியுறுத்த லினால் அவருக்கு துணை முதல்வர் பதவி கிடைத்தது. வாரிசு என்ற அடிப்படையில் அவருக்கு துணை முதல்வர் பதவி வரவில்லை.

விஜய் பேசியது குறித்து 'சினிமா செய்திகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய தில்லை' என்று துணை முதல்வர் கூறி இருக்கிறார். ஏனெனில், அரசியலில் நடிகர் விஜய் அந்த அளவுக்கு வளரவில்லை. ஆகையால், அவரது பேச்சுக்கு கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திமுக தலைவர் திராவிட மாடலை முன்னெடுத்துச் செல்லும் கருத்தியல் தலைவர்தான். வேங்கைவயல் விவகாரம் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி சத்திய நாராயணன் தலைமையில் ஒரு நபர் குழுவை அமைத்து விசாரணை நடத்தப்படுகிறது. டிஎன்ஏ பரிசோதனையும் நடத்தப்பட்டுள்ளது. இதுவரை யாரையும் கைது செய்யவில்லை என்று கூறுகிறார்களென்றால், நாங்கள் யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அந்த விவகாரத்தில் அமைச்சரோ, எம்எல்ஏவோ குறுக்கீடு செய்யவில்லை.

கூட்டணியை விமர்சிக்கும் வகையில் விசிக ஆதவ் அர்ஜுனா பேசியது தொடர்பாக விசிகவில் இருந்து அவரை நீக்குவதெல்லாம் அந்தக் கட்சியின் உள் விவகாரம். அதைப் பற்றி எதையும் நாங்கள் வெளியில் இருந்து அந்தக் கட்சிக்கு ஆலோசனை கூற முடியாது. ஐபிஎஸ் அதிகாரிகள் மாநாட்டில் திருச்சி எஸ்.பி. வருண், கருத்து தெரிவித்து இருப்பதை டிஜிபி பார்த்துக்கொள்வார். தனி மனிதன் தன்னுடைய உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு அரிசியல் சட்டத்தில் இடம் உண்டு. எனினும், மத்திய அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்கும். அதானியோடு அதிமுக ஆட்சியில்தான் கடந்த 2014ல் ஒப்பந்தம் செய்யப் பட்டதே தவிர, திமுகவில் அல்ல. முல்லைப்பெரியாறு அணையை தமிழக பொறியாளர்கள் பராமரித்து வருகின்றனர்'' என்றார் அமைச்சர் ரகுபதி.

முன்னதாக, சென்னையில் வெள்ளிக்கிழமை நடந்த 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய தவெக தலைவர் விஜய், "மக்கள் உணர்வுகளை மதிக்க தெரியாத, மக்களுக்கு அடிப்படை பாதுகாப்பை கூட உறுதி செய்ய இயலாத, கூட்டணிகணக்குகளை மட்டுமே நம்பி, இறுமாப்புடன் 200 வெல்வோம் என்று எகத்தாள முழக்கமிடும் மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு, என் மக்களோடு இணைந்து நான்விடும் எச்சரிக்கை. நீங்கள், உங்கள் சுய நலனுக்காக பல வழிகளில் பாதுகாத்து வரும் உங்கள் கூட்டணி கணக்குகள் அனைத்தையும் 2026ல் மக்களே மைனஸ் ஆக்கிவிடுவார்கள்'' என்று பேசினார்.

அதே நிகழ்வில் பேசிய விசிக துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, "பிறப்பால் அனைவரும் சமம் என்ற கருத்தியலை அம்பேத்கர் உருவாக்கியது போல, தமிழகத்தை ஒரு கருத்தியல் தலைவர் தான் ஆள வேண்டும். கொள்கை பேசிய கட்சிகள் இதுவரை அம்பேத்கரை மேடை ஏற்றவில்லை. 2026 தேர்தலில் மன்னராட்சியை ஒழிக்க வேண்டும்'' என்று பேசியது குறிப்பிடத்தக்கது.

## "அவர்கள் அதிமேதாவிகள், களத்துக்கே வராத தற்குறிகள்!"
### அமைச்சர் சேகர்பாபு காட்டம்

சென்னை, டிச.8

"வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்லும் என்ற நம்பிக்கை வீணாகும் என்று ஒரு சிலர் அதிமேதாவிகளாக, தற்குறி களாக களத்துக்கே வராதவர் கள் எல்லாம் பேசிக் கொண் டிருக்கிறார்கள். எங்களுடைய நிலைப்பாடு 200 அல்ல... 234 தொகுதிகளையும் வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கைப்பற்றும்'' என்று அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.



சென்னையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், 200 தொகுதிகளில் வெல்லும் என்ற நம்பிக்கை வீணாகும் என்று ஒரு சிலர் அதிமேதாவிகளாக, தற்குறிகளாக களத்துக்கே வராதவர்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய நிலைப்பாடு 200 அல்ல... 234 தொகுதிகளையும் வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கைப்பற்றும்.

திமுகவுக்கு எப்போதெல்லாம் அவதூறுகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் 80 கி.மீ வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கக் கூடிய திமுக தொண்டன் 100 கி.மீ வேகத்தில் பயணிப்பான். 2026ல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை மீண்டும் அரியணையில் ஏற்றும்வரை எங்களுடைய பயணம், வேகம் குறையாது,'' என்று அவர் கூறினார்.

முன்னதாக, சென்னையில் வெள்ளிக்கிழமை நடந்த 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய தவெக தலைவர் விஜய், "மக்கள் உணர்வுகளை மதிக்க தெரியாத, மக்களுக்கு அடிப்படை பாதுகாப்பை கூட உறுதி செய்ய இயலாத, கூட்டணிகணக்குகளை மட்டுமே நம்பி, இறுமாப்புடன் 200 வெல்வோம் என்று எகத்தாள முழக்கமிடும் மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு, என் மக்களோடு இணைந்து நான்விடும் எச்சரிக்கை. நீங்கள், உங்கள் சுய நலனுக்காக பல வழிகளில் பாதுகாத்து வரும் உங்கள் கூட்டணி கணக்குகள் அனைத்தையும் 2026ல் மக்களே மைனஸ் ஆக்கிவிடுவார்கள்'' என்று பேசியிருந்தார்.

## கூட்டணி குறித்து பேராசை இல்லை- நூல் அறிமுக நிகழ்வில் திருமாவளவன் பேச்சு

சென்னை, டிச.8

"தற்காலிக அதிகாரத்துக்காக அம்பேத்கரின் வழியில் இருந்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியால் நழுவ முடியாது,'' என அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.



சென்னை, அசோக் நகரில் உள்ள விசிக தலைமையகத்தில் அம்பேத்கரின் வாழ்க்கை குறித்து அவரது உறவினர் ஆனந்த் டெல்டும்டே எழுதிய 'iconoclast' நூல் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற விசிக தலைவர் திருமாவளவன் பேசியது: "எல்லோரும் அம்பேத்கருக்கு பிறந்தநாள் கொண்டாடுவதன் மூலம் அவரை இந்து தலைவராக அடையாளப்படுத்தி விழுங்க பார்க்கின்றனர். இதைத் தடுப்பது நம் முன் இருக்கும் சவால். தற்காலிமான அதிகாரத்துக்காக அம்பேத்கரின் வழியில் இருந்து நம்மால் நழுவ முடியாது.

4 எம்எல்ஏக்கள் போதாது 10 வேண்டும் என்பதில் என்ன வளர்ச்சி இருக்கிறது. தேர்தல், வெற்றி, கூட்டணி என்பதெல்லாம் இரண்டாம் கட்டமானது என்றாலும் அதிலும் தெளிவாக இருக்க வேண்டும். இதற்கான மோதலே நடைபெற்று வருகிறது. அவர்கள் விரும்புவதை நாம் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர். அந்த எதிர் பார்ப்புகளுக்கு எதிர்வினை யாற்றவா கட்சி நடத்துகிறோம். அங்கே போனால் அள்ளலாமா, இங்கே போனால் வாரலாமா என எங்களுக்கு எந்த பேராசையும் இல்லை.

என்னை பாமக நிறுவனர் ராமதாஸை பின்பற்றுமாறு ஒருவர் கூறுகிறார். நாங்கள் 100 சதவீதம் அம்பேத்கரை பின்பற்றுகிறவர்கள். எங்களுக்கு அவர் வணிகப் பொருள் கிடையாது. கருத்தியல் அடை யாளம். அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர வேண்டும் என்பது விசிகவின் நோக்கங்களுள் ஒன்று. அந்த அதிகாரம் எதற்கு பயன்பட வேண்டும் எனும் தெளிவோடு அனைத்தையும் அணுகுகிறோம். நாங்கள் கருத்தியலில் எவ்வளவு உறுதியோடு இருக்கிறோம் என்பதை ஒவ்வொரு முறையும் உறுதிப்படுத்த தேவையில்லை'' என்று பேசினார்.

நூலாசிரியர் ஆனந்த் டெல்டும்டே பேசும்போது, "அம்பேத்கரை வணிகப் பொருளாகவோ, வழிபாட்டு பொருளாகவோ பயன்படுத்தக் கூடாது என சொல்வதால் என்னை அம்பேத்கருக்கு எதிரானவன் போல் சித்தரிக் கின்றனர். அதை பற்றி எனக்கு கவலையில்லை. தமிழகத் தைத் தவிர அனைத்து மாநிலங் களிலும் பாஜகவை பட்டியலினத் தவர்கள் ஆதரிக்கக் கூடிய நிலை உருவாகிவிட்டது. மக்களின் உணர்ச்சிகளை பாஜக புரிந்து வைத்துள்ளது. அம்பேத்கர் எனது கடவுள் என்கிறார் பிரதமர் மோடி. இதை நம்பி மக்கள் ஏமாறுகின்றனர். அம்பேத்கரின் செயல்பாடுகள் மூலம் நாம் அவரை புரிந்து கொள்ள வேண்டும். அவர் எதிர்பார்த்த தாக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும்,'' என்றார்.

விசிக பொதுச்செயலாளர் துரை.ரவிக்குமார் பேசுகையில், "அம்பேத்கரின் அரசியல், அவர் மீதான விமர்சனம் என பல்வேறு பார்வையில் நூலை ஆனந்த் டெல்டும்டே எழுதியுள்ளார். எனினும், இந்த புத்தகத்தில் விசிகவின் பங்களிப்பு இடம் பெறவில்லை என்பது எனது மனக்குறை. விசிகவை உள்ளடக்கிய அடுத்த பதிப்பை வெளியிட வேண்டும்.'' என்று அவர் பேசினர்.

இந்த நிகழ்வில், எம்எல்ஏக்கள் எஸ்.எஸ்.பாலாஜி, பனையூர் பாபு, ஆளூர் ஷாநவாஸ், மாநில திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், மூத்த பத்திரிகையாளர்கள் ஏ.எஸ்.பன்னீர்செல்வம், ஆர்.விஜய்சங்கர், விசிக துணை பொதுச்செயலாளர் கவுதம சன்னா, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம், தகர் தமிழ்ச் செல்வன், இளஞ்சேகுவாரா, முதன்மைச் செயலாளர் ஏ.சி.பாவரசு, செய்தித் தொடர்பாளர் கு.கா. பாவலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## எடப்பாடி பழனிசாமியை நீக்கும் காலமே அதிமுகவுக்கு பொற்காலம்- ஓபிஎஸ்




சென்னை, டிச.8

"பொதுச் செயலாளர் பதவியில் இருந்து பழனிசாமியை நீக்கும் காலமே அதிமுகவுக்கு பொற்காலம்" என்று சென்னையில் நடைபெற்ற அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரி வித்துள்ளார்.

அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை எழும்பூரில் இன்று நடைபெற்றது. மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், பெஞ் சல் புயல் தாக்கத்தால் பெய்த அதிகனமழை காரணமாக உயிரிழந்தவர்களுக்கும், பல்லாவரத்தில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்ததால் உயிரிழந்தவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட நிரந்தர பொதுச் செயலாளர் பதவி வழங்கியதை நீக்கியதற்கு கண்டனம் தெரி வித்தும், மதுரையில் டங்க்ஸ்டன் சுரங்கம் அமைப்பதில் திமுக இரட்டை வேடம் போடுவதாக கூறி கண்டனம் தெரிவித்தும், கோடநாடு கொலை, கொள்ளை வழக்கை தாமதப்படுத்தி திமுக அரசை கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், அதிமுகவை தொண்டர்கள் இயக்கமாக மாற்றுவது, திமுக ஆட்சியை அகற்றுவது என்பன உள்ளிட்ட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசியது: அதிமுகவில் 1989ம் ஆண்டுக்கு முன்பு பழனிசாமி உறுப்பினராக கூட இல்லை. அவர் பேசுவதெல்லாம் பொய். நான் ஜானகி அணியில் இருந்து ஜெயலலிதாவுக்கு பாதக செயலை செய்ததாக பழனிசாமி உருவப்படுத்தினார். அதே ஜானகிக்கு இன்று பழனிசாமி நூற்றாண்டு விழா எடுத்திருக்கிறார். இது தான் காலத்தின் கோலம். அதிமுகவின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா 30 ஆண்டுகள் வழி நடத்தி இருக்கிறார். 15 ஆண்டுகளுக்கு மேல் முதல்வராக இருந்திருக்கிறார். அவரை கவுரவிக்கும் வகையில் கட்சியின் உச்சபட்ச பதவியாக நிரந்தர பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டது. அதை ரத்து செய்து, பொதுச் செயலாளர் பதவியை பழனிசாமி கைப்பற்றி இருக்கிறார். இது ஜெயலலிதாவுக்கு செய்த துரோகம்.

பொதுச்செயலாளர் பதவியில் இருந்து பழனிசாமியை நீக்கும் காலமே அதிமுகவுக்கு பொற்காலம். பழனிசாமியின் சர்வாதிகாரம் முடிவுக்கு வரும் காலம் நெருங்கிவிட்டது. விரைவில் தொண்டர்களின் இயக்கமான அதிமுக தொண்டர்கள் கைக்கு வரும். விரைவில் மதுரையில் மாநாடு நடத்தப்படும், அதனைத் தொடர்ந்து கோவையிலும், இறுதியில் சென்னையில் நடத்தப்படும்'' என்று அவர் கூறினார். இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.வைத்திலிங்கம், வெல்லமண்டி நடராஜன், தருமர் எம்பி, மனோஜ் பாண்டியன் எம்எல்ஏ, கொள்கை பரப்பு செயலாளர் மருது அழகுராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மகா விகாஸ் கூட்டணியில் இருந்து வெளியேறியது சமாஜ்வாதி
### பாபர் மசூதி இடிப்பு குறித்த சிவசேனா பதிவால் அதிருப்தி

மும்பை, டிச.8

அயோத்தியில் பாபர் மசூதி இடிப்புக்கு ஆதரவு தெரி வித்து உத்தவ் தாக்கரேவின் நெருங்கிய உதவியாளர் வெளியிட்ட பதிவினைத் தொடர்ந்து, மகா விகாஸ் அகாதி கூட்டணியில் இருந்து வெளியேறுவதாக மகாராஷ்டிரா மாநில சமாஜ் வாதி கட்சித் தலைவர் அபு அஸ்மி அறிவித்துள்ளார். மகாராஷ்டிரா பேரவையில் சமாஜ்வாதி கட்சிக்கு இரண்டு எம்எல்ஏக்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



டிசம்பர் 6ம் தேதி, பாபர் மசூதி இடிப்பின் 32வது ஆண்டு நினைவுநாளில் உத்தவ் தாக்கரே அணி சிவசேனாவின் பேரவையின் மேலவை உறுப்பினர் மிலிந்த் நர்வேகர், மசூதி இடிக்கப்பட்டதற்கு ஆதரவு தெரிவித்து செய்தித்தாளில் விளம்பரம் ஒன்றை வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து சமாஜ்வாதி கட்சியின் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சமாஜ்வாதி கட்சியின் மகாராஷ்டிர மாநிலத் தலைவர் அபு அஸ்மி கூறுகையில், "பாபர் மசூதியை இடித்தவர்களுக்கு வாழ்த்து தெரி வித்து உத்தவ் அணி சிவசேனா நாளிதழ்களில் விளம்பரம் கொடுத்துள்ளது. அவரது (உத்தவ் தாக்கரே) உதவியாளர் தனது எக்ஸ் பக்கத்தில், மசூதியை இடித்தவர்களைப் பாராட்டி பதிவொன்றைப் போட்டுள்ளார். நாங்கள் மகா விகாஸ் அகாடியில் இருந்து வெளியேறுகிறோம். மகா விகாஸ் அகாடி கூட்டணியில் உள்ள ஒருவர் எப்படி அவ்வாறு பேச முடியும்? பின்னர் பாஜகவுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? நாங்கள் ஏன் கூட்டணியில் நீடிக்க வேண்டும்?'' என்று தெரி வித்துள்ளார்.

டிசம்பர் 6ம் தேதி தனது எக்ஸ் பக்கத்தில், பாபர் மசூதி இடிக்கப்படும் படத்துடன் சிவசேனா நிறுவனர் பால் தாக்கரேவின், "இதனைச் செய்தவர்கள் குறித்து நான்பெருமை கொள்கிறேன்'' என்ற மேற்கோளையும் மிலிந்த் நர்வேகர் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில் உத்தவ் தாக்கரே, ஆதித்ய தாக்கரே மற்றும் நரவேகர் படங்களும் இடம்பெற்றிருந்தன.

இரு கட்சிகளுக்கு இடை யேயான விரிசல் சனிக்கிழமை மாநில சட்டப்பேரவையில் வெளிப்படையாக தெரிந்தது. மகாராஷ்டிர பேரவையின் சிறப்புக் கூட்டத்தின் முதல் நாளில் இன்று மகா விகாஸ் அகாடி எம்எல்ஏக்கள் உறுப்பினர்களாக பதவியேற் காமல் புறக்கணித்தனர். இந்நிலையில், சமாஜ்வாதிக் கட்சியின் இரண்டு எம்எல்ஏக்கள் பதவியேற்றனர்.

மன்குர்த் சிவாஜி நகர் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து நான்காவது முறையாக அபு அஸ்மி பதவியேற்றார். அவரிடம் எம்விஏ எம்எல்ஏக்கள் பதவி ஏற்காதது குறித்து கேட்டபோது, "அதற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம், தொகுதிப் பங்கீட்டின்போது எங்களைத் தொடர்பு கொள்ளவில்லை. தேர்தலின்போது எந்த ஓர் ஒருங்கிணைப்பும் இல்லை'' என்றார்.

ஹரியானா தேர்தல் தோல்விக்கு பின்பு சமாஜ் வாதி, காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையேயான விரிசல் வெளிப் படையாக தெரிந்தது. ஹரியா னாவில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி மிகவும் திமிரு டன் அங்கு போட்டியிட தங்க ளுக்கு சீட் வழங்கவில்லை என்று அகிலேஷ் யாதவ் குற்றம்சாட்டி யிருந்தார். கடந்த 2023 மத்தியப் பிரதேச தேர்தலிலும் சமாஜ் வாதிக் கட்சிக்கு எந்த இடமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியின் நகரமன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் ஒரு மாத ஊதியத்தை தமிழக முதல்வரின் வெள்ள நிவாரண நிதிக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார்

# தாம்பரம் சண்முகம் சாலையில் பாபர் மசூதி இடிப்பினை கண்டித்து எஸ்.டி.பி.ஐ.கட்சி சார்பில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டம்






தாம்பரம், டிச.8

பாபர் மசூதி இடிப்பு தினமான டிசம்பர் 6 அன்று ‘பாசிச எதிர்ப்பு தினம்’ என்கிற பெயரில் தமிழகம் உட்பட இந்தியா முழுவதும் எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

அதன்படி தாம்பரம் சண்முகம் சாலையில் செங்கல்பட்டு மாவட்ட எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பில் மக்கள் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.

இதில் பெண்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டிற்கு பின் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் முன்னாள் மாநில தலைவர் தெகலான் பாகவி செய்தியாளர்களிடம் கூறும்போது, பாபர் மசுதி இடிப்பு வழக்கில் ஒரு பள்ளிவாசல் தானே விட்டு கொடுக்கலாமே என்று தெரிவித்தனர். ஆனால் தற்போது 19 பள்ளிவாசலுக்கு உரிமை கோருகின்றனர்.

வழிபாட்டுத் தலங்கள் சட்டம் 1991ஐ வலுவாக அமல்படுத்தி அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் ஒன்றிய; மாநில அரசுகளும், நீதித்துறையும் பாதுகாக்க வேண்டும் என கேட்டுகொண்டார்..

# 191 வட்டச் செயலாளர் ஜி.ரவி தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா






சோழிங்கநல்லூர் டிச.8

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 191 வது வட்டம், ஜல்லடியன்பேட்டையில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு 191 வட்டக் கழகச் செயலாளர் ஜி. ரவி தலைமையில் விழாவில் மகளிர் அனைவருக்கும் புடவைகள், பிரட் பரிசு பொருட்களை வழங்கி சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் தலைமை கழக பேச்சாளர் மதுரை ஜீவா, இளம் பேச்சாளர் மகிழ்வன் மற்றும் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், பார்த்திபன் பொறுப்பாளர் டாக்டர். சந்திரபாபு, முன்னாள் பெருந்தலைவர் பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.ஏழுமலை, 189 வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினருமான லயன் வா.பாபு, பகுதி கழக நிர்வாகிகள் தனசேகர், குமரேசன், கே.டி.ரவி, முன்னாள் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பத்மநாதன், வட்டக் கழகச் செயலாளர்கள் நாகராஜ், தேவா, 190 வது வட்டக் கழகச் செயலாளர் பி. ஆரோன்அரசு, முன்னாள் தலைவரும் வட்டக் கழக செயலாளருமான ராஜேந்திரன், தலைமைக் கழக பேச்சாளர் ஏகாம்பரம், 191 வது வட்டக் கழக துணைச் செயலாளர் ஆர். சீனிவாசன் மற்றும் பாலாஜி நன்றி உரையாற்றினார். விழாவில் மாவட்ட, ஒன்றிய ,ஊராட்சி, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் துளிர் திறனறிதல் தேர்வு 2000 க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்பு




சிவகங்கை, டிச.8

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக நடத்தப்பட்ட துளிர் திறனறிதல் தேர்வை தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்று தேர்வு எழுதினர். இதில் சிவகங்கை மாவட்டத்தில் காளையார்கோவில் சிவகங்கை மானாமதுரை திருப்புவனம் திருப்பத்தூர் திருப்புவனம் தேவகோட்டை சாக்கோட்டை இளையாங்குடி ஒன்றியங்களில் உள்ள 2000 மேற்பட்ட மாணவ மாணவிகள் தேர்வில் கலந்துகொண்டார்கள்.

போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் 6 முதல் 8 ஆம வகுப்பு களுக்கு இளநிலை எனவும் 9,10 வகுப்புகளுக்கு உயர்நிலை எனவும் 11,12 வகுப்புகளுக்கு மேல்நிலை எனவும் மூன்று பிரிவுகளில் தேர்வுகள் நடைபெற்றது. மாணவர்களிடம் அறிவியல் பார்வை அறிவியல் கண்ணோட்டம் அறிவியல் மனப்பான்மையை வளர்த்திடவும், ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகள் எழுப்பி அதற்கு தீர்வு காண்பதற்கும் புத்தக வாசிப்பை ஊக்குவிப்பதற்கும் இத்தேர்வு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தேர்வு எழுதிய அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. ஒரு வருடத்திற்கு மாதந்தோறும் விஞ்ஞான துளிர் என்ற அறிவியல் மாத இதழ் அனைவருக்கும் வழங்கப்படவுள்ளது.

தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சிறப்பாக செய்திருந்தார். மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் கௌரவ தலைவர் சாஸ்தா சுந்தரம் மாவட்டப் பொருளாளர் பிரபு காளையார்கோவில் கிளைத் தலைவர் வீரபாண்டி சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் பள்ளியின் முதல்வர்கள் அடைக்கலசாமி விக்டர் வரதராஜன் செர்வின் ஆசிரியர்கள் அனன்சியா மகாலட்சுமி ஆரோக்கியஅனிதா திலகம் சண்முகம் ராஜா சரண்யா மணிமலர் தமிழ்செல்வம் சிவா மணிமொழி மோகனசுந்தரம் வானவில் மன்ற கருத்தாளர்கள் சித்ரா பிரியங்கா ஜோதி செந்தாமரை தனலட்சுமி வேணி ஆகியோர் சிறப்பான ஏற்பாட்டை செய்திருந்தனர்.

# தேசிய பசுமை படை சார்பாக அமராவதிபுதூரில் புகையில்லாப் பசுமை சமையல் மற்றும் ஓவியப்போட்டி






அமராவதி புதூர் டிச.8

சிவகங்கை மாவட்டம் அமராவதி புதூரில் தேசிய பசுமைப் படை சார்பாக புகையில்லா பசுமை சமையல் மற்றும் ஓவியப்போட்டியானது அமராவதிபுதூர் சுப்பிரமணியன் செட்டியார் குருகுலம் மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு தேசிய பசுமைப் படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ தலைமை வகித்தார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி நோக்கவுரையாற்றினார். சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டார்கள். நடுவர்களாக தலைமையாசிரியர் கென்னடி ஆங்கில பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி ஆசிரிய பயிற்றுநர்கள் லட்சுமி வனிதா நஸ்ரின்பேகம் நிவேதா சிறப்பாக பணியாற்றினார்கள். புகையில்லா பசுமை சமையல் என்ற தலைப்பில் இயற்கை உணவுகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

சூழல் பாதுகாப்பில் மரபு சாரா எரிசக்தி என்ற தலைப்பில் ஓவியங்களை மாணவ மாணவிகள் தத்ரூபமாக வரைந்திருந்தனர். போட்டியில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கு மரக்கன்றுகள் டீ சர்ட் தொப்பிகள் வழங்கப் பட்டன.

இயற்கை உணவு சமையலுக்கான போட்டியில் சிட்டாலாட்சி நினைவு உயர்நிலைப் பள்ளி கண்டனூர் முதலிடத்தையும் சுப்பிரமணியன் செட்டியார் குருகுலம் மேல்நிலைப்பள்ளி அமராவதிபுதூர் இரண்டாமிடத்தையும் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி டிடி நகர் மூன்றாம் இடத்தையும் சூழல் பாதுகாப்பில் மரபுசாரா எரிசக்தி என்ற தலைப்பில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும் அரசு மேல்நிலைப்பள்ளி அரியக்குடி இரண்டாமிடத்தையும் சிட்டாலாச்சி நினைவு உயர்நிலைப் பள்ளி கண்டனூர் மூன்றாம் இடத்தையும் பெற்று பரிசுகளை பெற்றனர். மேல்நிலைப்பள்ளி பள்ளியின் கல்வி ஆலோசகர் கனகரத்தினம் ஓவிய ஆசிரியர் செல்வம் உடற்கல்வி ஆசிரியர் ராமசாமி போட்டிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர். தமிழ் ஆசிரியர் சரவணன் நன்றி கூறினார்.

# “தமிழகம் கோரிய ரூ.37,906 கோடி நிவாரண நிதியில் மத்திய அரசு வழங்கியது ஒரு சதவீதம்கூட இல்லை” அமைச்சர் தங்கம் தென்னரசு



விருதுநகர், டிச.8

“பெஞ்சல் புயலால் பாதிக்கப் பட்ட தமிழகம் கோரிய ரூ.37,906 கோடி நிவாரண நிதியில் மத்திய அரசு வழங்கியது ஒரு சதவீதம்கூட இல்லை” என மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, விருதுநகர் அருகே மல்லாங்கிணரில் உள்ள அவரது இல்லத்தில், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் கூறியது: “மாநில பேரிடர் நிவாரண நிதிக்காக மத்திய அரசு தனது பங்களிப்பான ரூ.944 கோடியை நேற்று தமிழகத்துக்கு விடுவித்துள்ளது. இந்த நிதியானது, பெஞ்சல் புயல் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுவதைக் கருத்தில் கொள்ளாமல், ஒன்றிய அரசால் அனைத்து மாநிலங்களுக்கும் 15 வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி சட்டபூர்வமாக விடுவிக்கப்பட வேண்டிய நிதியாகும்.

கடந்த 202122ம் ஆண்டில் மாநில பேரிடர் நிதிக்கான நிதி ரூ.1,088 கோடி. இதில் மத்திய அரசு பங்கு ரூ.816 கோடி. மாநில அரசின் பங்கு ரூ.272 கோடி. மொத்தம் ரூ.816 கோடி. மத்திய அரசு 202223ம் ஆண்டில் மாநில பேரிடர் நிதிக்காக மத்திய அரசு கொடுக்க வேண்டிய நிதி ரூ.1,142 கோடி. இதில், மத்திய அரசு ரூ.856.50 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.285.50 கோடியும் என மொத்தம் ரூ.856.50 கோடி.

கடந்த 202324ல் இதேபோன்று மத்திய அரசு கொடுக்க வேண்டிய நிதி ரூ.1,200 கோடி. ஆனால், மத்திய அரசு விடுவித்துள்ள தொகை ரூ.900 கோடி. மாநில அரசு விடுவித்துள்ள தொகை ரூ.300 கோடி. மொத்தம் ரூ.900 கோடி. தற்போது 202425ம் ஆண்டில் மத்திய அரசு விடுவிக்க வேண்டி நிதி ரூ.945 கோடி. அந்த தொகைதான் இந்த ரூ.944.80 கோடி. இது, கடந்த ஜூன் மாதத்தில் வழங்க வேண்டிய நிதி. மத்திய அரசு, மாநிலப் பேரிடர் நிவாரண நிதிக்கான தனது பங்கான ரூ.944 கோடி ரூபாயை நேற்று தமிழகத்துக்கு விடுவித்துள்ளது.

மேலும், குறிப்பிட வேண்டுமென்றால், நடப்பு நிதியாண்டுக்கான முதல் தவணைத் தொகையின் விடுவிப்பு தாமதப்படுத்தப் பட்டுள்ளது. சாதாரணமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டிய நிதி தற்பபோது டிசம்பர் மாதத்தில்தான் விடுவிக்கப் படுகிறது.

தமிழகம், குறிப்பாக தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கூடுதல் நிதியை அனுமதிக்கக் கோரியுள்ளது. தேசியப் பேரிடர் நிவாரண நிதியமானது, பேரிடர்களால் பாதிக்கப்படும் மாநிலங்களின் நிவாரணம் மற்றும் மீட்புத் தேவைகளுக்கான நிதியை நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். கடந்த நிதியாண்டில், மிக்ஜாம் புயல் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அதிகனமழைப் பொழிவு ஆகிய இரண்டு பேரிடர்கள் ஏற்பட்ட பின்னரே, மிகச் சொற்பமான ரூ.276 கோடி ரூபாயை, தேசிய பேரிடர் நிவாரண நிதியின் கீழ், அதுவும் 4 மாத தாமதத்துக்குப் பின்னரே ஒன்றிய அரசு அனுமதித்தது. இது, மாநில அரசு கோரிய ரூ.37,906 கோடியில் இது ஒரு சதவீதம்கூட இல்லை.

தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் பெஞ்சல் புயலானது உயிரிழப்புகளையும், வாழ்வாதார பாதிப்புகளையும் பெருமளவில் ஏற்படுத்திச் சென்றுள்ளது. தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு ரூ.6.675 கோடி ரூபாய் தேவைப்படும் என ஆரம்பகட்ட மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளது. பெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, நிதி விடுவிப்புக் கோரிக்கையினை தமிழக முதல்வர் நேற்று அளித்துள்ள நிலையில், மத்திய அரசு அலுவலர் குழு நேரடி ஆய்வும் மேற்கொண்டுள்ளது. பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களின் இந்தத் துயர்மிக்க நேரத்தில அவர்களை ஆதரிக்கும் வகையில் மத்திய அரசு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதியை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்” என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.




ஆஷா நிவாஸ், சென்னை மேடவாக்கம் கெல்லிஸ் அனைத்து பெண்கள் சேவை இல்லத்தில் வைத்து 07.12.24 சனிக்கிழமை அன்று குழந்தைகள் உரிமை தினம் மற்றும் குழந்தைகள் தின விழா நடத்தியது. இதில் 700 குழந்தைகள் கலந்துகொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தி அனைவரையும் மகிழ்வித்தனர். மாவட்ட பாதுகாப்பு அலுவலர் திரு. மதியழகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று ஆஷா நிவாஸ் பணிகளை மனமகிழ்ச்சியுடன் குழந்தைகளுக்கு விருதுகளை வழங்கினார். ஆஷா நிவாஸ் முதன்மை சமுதாய வளர்ச்சி அலுவலர் லில்லி ஜோசபின் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து தலைமைதாங்கி அனைவர்க்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

## கம்பத்தில் மக்கள் நல சங்க நிர்வாகிகள் கூட்டம்

கம்பம் டிச.8



தேனி மாவட்டம் கம்பத்தில் மக்கள் நல முன்னேற்ற சங்கத்தின் நிறுவன தலைவர் இரா. கனேசன் மக்கள் நல முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் மக்கள் நல சங்கத்தின் வளர்ச்சி குறித்தும் மற்றும் பொது மக்களுக்கு சமூக சேவை ஆற்றிட வேண்டும் நமது சங்க உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் இல்ல விழாவில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்து தர வேண்டும் நமது சங்கம் குறிக்கோள் மக்களுக்கு சேவை செய்யும் சங்கமாக செயல்பட வேண்டும் என பல்வேறு கருத்துக்களை நிர்வாகிகளிடம் நிறுவன தலைவர் இரா. கணேசன் கூறினார்.இந்த நிகழ்ச்சியில் மாநில செயலாளர் சந்திர பாண்டியன்,மாவட்ட செயலாளர் சுல்தான் இப்ராகிம்,மாநில வர்த்தக பிரிவு செயலாளர் மணிகண்டன், மாவட்ட அணி செயலாளர்கள், நகர செயலாளர்கள், நகர செயலாளர்கள்,பேரூர் கழக செயலாளர், மற்றும் மக்கள் நல முன்னேற்ற சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் அம்பேத்கரின் 68வது நினைவு நாளை முன்னிட்டு விடுதலை சிறுத்தை கட்சியின் மாவட்ட தலைவர் சாமுவேல் எபினேசர் அவர்கள் தலைமையில் சமூக ஊடகம் மாநிலத் துணைச் செயலாளர் ஜெ.கதிரவன் அவர்கள் முன்னிலையில் தாம்பரம் பேருந்து நிலையத்தில் டாக்டர் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இந்தநிகழ்ச்சியில் தாம்பரம் கிழக்கு பகுதி நகர செயலாளர் ஆதி சாலமன் தாம்பரம் மேற்கு பகுதி நகரச் செயலாளர் ராமானுஜம் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பகுதி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது அதனை தொடர்ந்து உறுதிமொழி எடுக்கப்பட்டது..

## நரிக்குடி அருகே தண்ணீர் திறப்பதில் இரு மாவட்ட விவசாயிகளிடையே முதல் மோதல் ஏற்படும் அபாயம்



நரிக்குடி டிச.8

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியம் வேளானேரி ஊராட்சிக்கு உட்பட்ட உமையன் ஆலங்குளம் கிராமத்தில் சுமார் 250 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் விவசாயம் செய்துள்ள நிலையில் தற்போது நெற்பயிர்கள் அனைத்தும் கருகி வருவதால் கண்மாயில் இருந்து தண்ணீர் பாய்ச்ச விவசாயிகள் தயாராகி வரும் நிலையில் விருதுநகர் மாவட்டம் உமையன் ஆலங்குளம் சிவகங்கை மாவட்டம் சின்ன கண்ணனூர் கிராம விவசாயிகளிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதுகுறித்து திருச்சுழி தாசில்தாரிடம் மனு கொடுத்துள்ளதாக தெரிவிக்கும் உமையன் ஆலங்குளம் கிராம விவசாயிகள் ஒரு வாரமாகியும் நடவடிக்கை எடுக்காததால் கருகி வரும் நெற் பயிர்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் பொழுது இரு மாவட்ட விவசாயிகளிடையே கடும் மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்திற்கு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வெள்ள நிவாரண பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி ஆணையாளர் மதுபாலன், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

## திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய பகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

திருக்கோவிலூர், டிச.8





தமிழக வனத்துறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் மருத்துவர். பொன்.கௌதமசிகாமணி வழிகாட்டுதல் படி

கன மழையினால் முற்றிலும் பாதிக்கப்பட்ட திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம்,அத்தண்டமருதூர் ஊராட்சி மற்றும் வடக்கு நெமிலி ஊராட்சி மக்களுக்கு, கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சி குழு துணைப்பெருந்தலைவரும் ,மாவட்ட திட்டமிடல் குழுவின் உறுப்பினரும், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும் ,மூத்த வழக்கறிஞருமான மு.தங்கம் அரிசியினை வழங்கினார். உடன் கிராம நிர்வாக அலுவலர் நேதாஜி, கிராம உதவியாளர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பாலு என்கிற பாலமுருகன், அவைத்தலைவர் தீனதயாளன், பொருளாளர் தண்டபாணி,மாவட்ட பிரதிநிதி அகஸ்தியர் மூலை ஆனந்தன், ஒன்றிய கவுன்சிலர்கள் சொரையப்பட்டு சுகவனராஜன், வடமருதூர் ஜெயப்பிரகலாதன், அத்தண்டமருதூர் பிரபு, வடக்கு நெமிலி ஊராட்சி மன்றத்தலைவர் பிரபு, அத்தண்டமருதூர் மற்றும் வடக்கு நெமிலி ஊராட்சிக்குட்பட்ட கிளை செயலாளர்கள் மற்றும் திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர்கள் திரளானோர் இருந்தனர்.

## கொடிநாள் தினத்தையொட்டி கொடிநாள் நிதிக்கு நன்கொடை வழங்கி ராமநாதபுரம்ஆட்சியர் வேண்டுகோள்

ராமநாதபுரம் டிச.8



கொடிநாள் தினத்தையொட்டி கொடிநாள் நிதிக்கு நன்கொடை வழங்கி அலுவலர்கள், பொதுமக்கள் தாராளமாக நிதி வழங்கி படைவீரர்களின் தியாகத்திற்கு உறுதுணையாக இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (07.12.2024) கொடிநாள் தினத்தை முன்னிட்டு முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் மூலம் கொடிநாள் விழா மற்றும் தேநீர் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையேற்று பேசுகையில்,

இந்திய நாட்டின் பாதுகாப்பு அரனாக பாதுகாத்து வரும் இந்திய ராணுவ வீரர்களின் தியாகத்தை போற்றும் விதமாக முன்னாள் படை வீரர்களுக்கான நலத்திட்டங்களை வழங்கிடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7ஆம் தேதியை முன்னாள் படை வீரர்களின் கொடிநாள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் பெறக்கூடிய நிதியினை முன்னாள் படை வீரர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் முன்னாள் படை வீரர் நலத்துறையின் மூலம் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு இலக்கீட்டை விட கூடுதலாக வசூல் செய்து முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் கடந்த ஆண்டு ரூ.84,10,000 வசூல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் தாரளமாக நிதி வழங்கி ரூ.98,97,270 வசூல் செய்து 100 இலக்கு என்பதை விட 117.68மூ இலக்கீடு எய்தமைக்கு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதுடன் அதேபோல் 2024 ஆம் ஆண்டுக்கான கொடிநாள் நிதி வசூல் நேற்று துவங்கப்பட்டுள்ளது. இதற்குரிய இலக்கீடை விட கூடுதலாக நிதி கிடைக்கும் வகையில் அதிகளவு நிதி அளித்து உதவிட வேண்டும்.

இக்கொடிநாள் மூலம் வசூல் செய்யப்படும் நிதி முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் பல்வேறு நலத்திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் இவ்வாண்டு நவம்பர் திங்கள் வரை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து முன்னாள் படைவீரர்களுக்கான ஓய்வூதியம், கண்கண்ணாடி மானியம், முன்னாள் படை வீரரின் மகள் திருமண மானியம், ஈமச்சடங்கு மானியம், விதவைகளுக்கான ஊக்கத் தொகை என மொத்தம் இம்மாவட்டத்தில் 177 பயனாளிகள் ரூ.46,71,108 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து பெறப்பட்ட நிதிக்கேற்ப நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

இந்த இனிய நாளில் இச்சலுகைகளை பெற்று நாடுகாத்த நம் முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், நன்றியினை தெரிவித்தார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் கொடிநாள் தினத்தையொட்டி கொடிநாள் நிதிக்கு நன்கொடையினை மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு அவர்கள், முன்னாள் படைவீரர் நலத்துறை உதவி இயக்குநர் அர்சுணன் கமாண்டர் (ஓய்வு) நடராஜன் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன் ஆர்.எஸ். மங்கலம் வட்டாட்சியர் வரதராஜன், முன்னாள் படை வீரர் சங்க தலைவர் செல்வம் நேமிநாதன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் செள. சங்கீதா முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது சார்ந்தோர் நலன்காக்க திரட்டப்படும் நிதியான படைவீரர் கொடிநாள் 2024 உண்டியல் வசூலினை துவக்கி வைத்தார்.

# துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு தேனியில் பழங்குடியினருக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

தேனி, டிச.8

தேனி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் பகுதியில் பழங்குடியினர் மக்கள் 50 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது



தமிழ்நாடு முதல்வர் ஆணைக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இ பி ராஜா வழிகாட்டுதலோடு தேனி திமுக தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் கிருஷ்ணன் எம்.எல்.ஏ., வழிகாட்டுதலோடு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராசன் தலைமையில் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் பேரூர் செயலாளர் சரவணன் முன்னிலையில் ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் பகுதியில் உள்ள 50 பழங்குடியின குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது

# ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே ரூ.7 கோடி செலவில் புதிய பணிகளை தொடங்கி வைத்த அமைச்சர்



ஈரோடு டிச 7:

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே வெள்ளோடு கள்ளுகடைமேட்டில் வெள்ளோடு நகரில் நகர்ப்புற மேம்பாடு ஒருங்கிணைந்த சாலை மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ 7 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் விரிவு படுத்தப்பட்ட சாலைகள் புதிய ரவுண்டானா தடுப்பு சுவர் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைதமிழ்நாடு வீட்டு வசதிதுறை அமைச்சர் சு.முத்துசாமி பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஈரோடு நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் ரமேஷ் கண்ணா, உதவி பொறியாளர் மணிகண்டன், ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, சென்னிமலை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் செங்கோட்டையன், ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்ரமணியம், குமாரபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோ, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக தொண்டரணி அமைப்பாளர் சுள்ளான் ராஜேந்திரன், உள்ளிட்டமாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வத்தலக்குண்டு அருகே தடை விதிக்கப்பட்ட கால்வாய் பகுதியில் தோட்டாக்களை வெடித்து குழு ஆய்வு

வத்தலக்குண்டு டிச.8

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே விருவீடு ஊராட்சி மேல அச்சனம்பட்டி பகுதியில் வைகை அணையிலிருந்து விடுவீடு பகுதிக்கும், உசிலம்பட்டி பகுதிக்கும் விவசாயத்திற்கு தண்ணீர் செல்லும் 58 ஆம் கால்வாய் செல்கிறது. அதேபகுதியில் பூசாரிபட்டி சுந்தர் கரடு பகுதியில் குவாரி நடத்தி வந்தார். குவாரியில் கல்லுடைக்க வெடி வைக்கும் போது 58ம் சிமிண்ட் கால்வாய் அதிர்வு ஏற்பட்டு சேதமடைய வாய்ப்புள்ளதாக கால்வாய் பாசன விவசாயிகள் புகார் செய்தனர். அதைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட கலெக்டர்



கல்குவாரி நடத்த தடை விதித்தார். அதைத் தொடர்ந்து சுந்தர் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். மதுரை ஐகோர்ட் தடை செய்யப்பட்ட குவாரி பகுதியை மண்ணியல் பேராசிரியர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் வைத்துஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டது.

அதைத்தொடர்ந்து அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் குமார் தலைமையில்8 பேர் கொண்ட குழுவினர்விருவீடு சென்று குவாரி பகுதியில் ஆய்வு செய்து நான்கு இடங்களில் குறைந்தது 14 முதல் 30 குழிகள் அமைத்து தோட்டாக்களை நிரப்பி வெடித்து சோதனை நடத்தினர் தோட்டாக்கள் வெடிக்கும் போது ஏற்படும் அதிர்வுகளை அதற்கான கருவிகள் கொண்டு பதிவு செய்தனர் சோதனை முடிந்த பின் அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

# பாபர் மசூதி இடிப்பு மற்றும் நீதிமன்ற தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி இந்திய தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பெரியகுளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

பெரியகுளம், டிச.8

தேனி மாவட்டம் பெரியகுளம் புதிய பேருந்து நிலைய பிரிவு கேஎஸ்கே கேண்டீன் எதிரில் இந்திய தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பாபர் பள்ளிவாசல் இடிப்பை கண்டித்தும், நீதிமன்ற தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தியும், பாபர் மஜீத் நிலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் ,வழிபாட்டு தலங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .




இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தேனி மாவட்ட செயலாளர் முபாரக் அலி தலைமை தாங்கினார் .மாநிலச் செயலாளர் யாசர் அராபாத், விடுதலை சிறுத்தைகள் கட்சி தேனி திண்டுக்கல் மண்டல செயலாளர் இரா. தமிழ்வாணன் ,அகில இந்திய பார்வர்ட் பிளாக் தேனி மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.ஆர். சக்கரவர்த்தி ,இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தேனி மாவட்ட தலைவர் ராஜா முகமது ,திராவிடர் கழகம் பெரியகுளம் நகர பொறுப்பாளர் அன்புக்கரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி செயலாளர் ஆலிம் எம்.அகமது முஸ்தபா , விசிக நகர செயலாளர் ஜோதி முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் கலந்து ஏராளமானோர் கொண்டனர்.

# தென்காசியில் தமுமுக சார்பில் வக்பு திருத்த மசோதவை திரும்ப பெற கோரி ஆர்ப்பாட்டம்



தென்காசி, டிச.8

தென்காசியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் வக்ப் திருத்த மசோதாவை முழுமையாக திரும்ப பெற கோரியும், வழிபாட்டுதலங்கள் பாதுகாப்புச் சட்டம் 1991 முழுமையாக கடைப்பிடிக்க கோரியும், உ.பி. மாநிலம் சம்பலில் உள்ள ஷாஹி பள்ளிவாசலில் ஆய்வில் காவல் துப்பாக்கி சூட்டில் ஐவர் கொல்லப்பட்டதை கண்டித்தும் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட தமுமுக செயலாளர் அப்துல் ரஹ்மான், மமக மாவட்ட செயலாளர் சலீம், தமுமுக மாவட்ட பொருளாளர் முகமது பாசித் தென்காசி மாவட்ட தமுமுக செயலாளர் அப்துல் ரஹ்மான், மமக மாவட்ட செயலாளர் சலீம், தமுமுக மாவட்ட பொருளாளர் முகமது பாசித் மற்றும் கன்னியாகுமரி தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் உள்ள இஸ்லாமியர்கள் மற்றும் நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட தமுமுகவை சார்ந்த ஒன்றிய நகர பேரூர் கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்கள். பெண்களும் ஜமாத்தார்களும் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியாக தென்காசி மாவட்ட தலைவர் எம் முகம்மது யாகூப் நன்றி கூறினார்.

# தேனியில் அம்பேத்கரின் 69 வது அம்பேத்கார் நினைவு நாளில் நலத்திட்டங்களை வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி

தேனி, டிச. 8

தேனியில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் 69 வது நினைவுதினமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு முதல்வர் காணொளி காட்சி வழியாக தமிழக அரசு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி . அதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பல்வேறு துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவை சார்ந்த 300 பயனாளிகளுக்கு 18 துறைகள் மூலம் சுமார் ரூ.2.40 கோடி மதிப்பிட்டான அரசின் பல்வேறு நலத்திட்ட




உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஷஜீவனா தலைமையில் தேனி பாராளுமன்ற தங்க தமிழ்ச்செல்வன்,பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவண குமார்,ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் முன்னிலை வசித்தனர்.

இதில் சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் கலந்து கொண்டு பயனளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கு கைபேசி,மிதிவண்டி, தையல் மிஷின், வீட்டின் ஆணை பத்திரம், ஆகியவற்றை வழங்கினார். இந்த விழாவில் மாவட்ட நகர ஒன்றிய பொறுப்பில் உள்ள கட்சி பொறுப்பாளர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அதுபோல் நலத்திட்ட வழங்கும் இந்த விழாவில் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் நவரசம் கலை - அறிவியல் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

ஈரோடு டிச.8

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் பகுதியில் உள்ள நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறையின் சார்பாக AICTE TRAINING AND LEARNING (ATAL) நிதி உதவியுடன் ஆறு நாட்கள் (03.12.2024 09.12.2024) இணையவழி ஆசிரியர் திறன் மேம்பாடு பயிலரங்கம் நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.கலைச்செல்வி வரவேற்புரை வழங்கினார். செல்வி பிளஸ்ஸிமோல் கருப்பொருள் உரை வழங்கினார்.




கல்லூரியின் முதல்வர் முனைவர். இரா.கனிஎழில் தலைமையுரை வழங்கி சிறப்பித்தார். மேலும், கல்லூரியின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் கல்லூரி கமிட்டி உறுப்பினர் முனைவர். இரா.பரமேஸ்வரன், இணைப் பேராசிரியர், கொங்கு பொறியியல் கல்லூரி பெருந்துறை, அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற துணைமுதல்வர் வி.சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார்.

கடந்த பத்து ஆண்டுகளாக நானோ டெக்னாலஜி பெரிய மாற்றத்தை அனைத்து துறைகளிலும் ஏற்படுத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து மருத்துவத்துறையில் நானோவின் பங்களிப்பை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இக்கருந்தரங்கம் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய துறைகளை விட மருத்துவத் துறையில் அளப்பரிய சாதனைகளையும், ஆராய்ச்சிகளையும் நானோ பெற்று உள்ளது. அதன் தொடர்ச்சியே இக்கருத்தரங்கம் பல்வேறு மருத்துவ துறையில் நேனோ பங்களிப்பு, பயிற்சி மற்றும் இதர பயன்களை எடுத்துரைக்கிறது.

இக்கருத்தரங்கில்Dr. Smagul Karazhanov, Norway, Dr. N. Senthil Kumar, Oman, Dr. Sadhasivam Thangarasu, Korea, Dr. N. J. Suthan Kissinger, Jubail போன்று நாடுகளில் இருந்து பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்ற பதின்முன்று சிறப்பு வல்லுநர்கள் சிறந்ததொரு ஆய்வு சார்ந்த கருத்துக்களை வழங்கியுள்ளார்.

மேலும் Dr. G. Madhushankar, Sri Ramakrishna Hospital, Dr N. Senthilkumar, Royal Care Hospital, Dr. R. Sureshkumar, Adyar Hospital

Chennai, Dr. E. K. Sagadevan, Lotus Hospital Erode, Dr. Kausalya Nallasivam, Jai Maruti Hospital Erode போன்ற மருத்துவ வல்லுநர்கள் சிறந்ததொரு ஆய்வு சார்ந்த கருத்துக்களை வழங்கிட உள்ளனர்.

இக்கருத்தரங்கில் அனைத்து துறை சார்ந்த பேராசிரியர் மற்றும் ஆய்வு மாணவ மாணவிகளும் பங்கேற்பதற்கான https://atalacademy.aicte-india.org/ இணைப்பில் இணைய வழியில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

# உலகப்புகழ் பாலமேடு ஜல்லிக்கட்டு பணிகள் சிறப்பு பூஜையுடன் தொடக்கம்



அலங்காநல்லூர், டிச.8

உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு விழா வருகின்ற ஜனவரி மாதம் 15ஆம் தேதி வெகு விமர்சையாக நடைபெற உள்ளது. இதையொட்டி ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடு களை தொடங்குவதற்கு முன்பாக பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகள் பிரசித்தி பெற்ற வலையபட்டி, ஸ்ரீமஞ்சமலை சுவாமி திருக்கோவிலில் ஜல்லிக்கட்டு விழா அழைப் பிதழை வைத்து சிறப்பு பூஜை செய்தனர்.

அதனைத் தொடர்ந்துபாலமேட்டில் உள்ள மஞ்சமலை ஆற்றுதிடல் வாடிவாசலில் சிறப்பு பூஜை செய்தனர். இந்த நிகழ்வில் மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல், செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக் மற்றும் மடத்து கமிட்டி உறுப்பி னர்கள் கலந்து கொண்டனர். முதற்கட்டமாக ஜல்லிக்கட்டு விழா அழைப்பிதழ் வழங்கும் பணிகள் தொடங்கப்பட்டது. அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், ஊர் பெரியோர்கள் என அனைவருக்கும் அழைப் பிதழ் வழங்க உள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161